மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 8/1987) நிறைவேற்றப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஒ) கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு, 1987.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1987) ** ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்.

திரு. எம். செல்லமுத்து : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த கடன் நிவாரணச் சட்ட திருத்தம் என்பது 1986 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23-ந் தேதிக்கு அப்பால் மேலும் ஓராண்டு காலம் நீடிக்கப்படுகிறது. இப்படி நீடிக்கப் படுவதை நான் என் கட்சியின் சார்பில் வரவேற்றாலும் இதன் காரண காரிய நோக்கங்களிலே கூறப்பட்டிருப்பதை பற்றி கருத்து சொல்லவிரும்புகிறேன். இந்த சட்டத்தினுடைய

** 1987 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

நோக்கத்தின்படி இதைப் பயன்படுத்த வேண்டிய ஏழையெளிய மக்களுக்கு அது இன்னும் போய்ச் சேரவில்லை என்பதுதான். அவர்கள் உரிய முறையில் மனு செய்ய முடியாத காரணத்தினாலே தான் இது மேலும் நீடிக்கப்படுகிறது என்று சொல்லப்பட்டி ருக்கின்றது. இந்தச் சட்டம் வந்து 5 ஆண்டுகள் முடிவுற்ற பின்னாலேயும், எவ்வளவோ வாய்ப்புகள் அரசுக்கு இருந்தும் கூட, இந்தச் சட்டத்தினுடைய தன்மைகளை எடுத்துசொல் வதற்கு ஏழையெளிய மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கு வழி வகுக்கப்படாமல் குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தினாலே தான் இந்த நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. எனவே இந்தச்சட்டத்தினை எல்லா மக்களும் புரிந்து கொள்கின்ற அளவுக்கு, முக்கியமாக இதனால் பயன்பெறக்கூடிய ஏழையெளிய மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய அளவுக்கு அரசு நிர்வாக இயந்தி ரம் முடுக்கிவிடப்படவேண்டும். இந்தச் சட்டத்தின் நோக் கத்தை விளக்கிச் சொல்லக்கூடிய அளவுக்கு காரியங்களைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

குறைந்த அளவுக்குத்தான் மனுக்கள் வந்திருப்பதாக மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இந்த 5 ஆண்டுகளில் கடன் நிவாரணத்திற்காக எவ்வளவு மனுக்கள் வரப் பெற்றிருக்கின்றன, எவ்வளவுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக் கின்றது, கடன் நிவாரணம் எத்தனை பேர்களுக்கு அளித்திருக் கின்றார்கள் என்பதை அறிவிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள் கிறேன்.

அதே போல இந்தச் சட்டத்தின்படி மனு செய்தாலும் நிவா ரணம் கிடைக்காத நிலை இருக்கின்றது என்ற மன உணர்வு இன் றைக்கு சாதாரண மக்கள் மத்தியிலே இருப்பதால் இந்த மனுக்கள் கூட குறைந்து இருக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அது மட்டுமல்ல, கடன் நிவாரண சட்டம் இருந்தாலும்கூட இன்றைக்கு அடகு கடைகளிலே ஏலம் போடுவது பத்திரிகைகளிலே வந்துகொண்டு இருக்கின்றது. பத் திரிகைகளிலே ஏலம் விடுவதற்கான அறிவிப்புகள் வந்துகொண் டிருக்கின்றன. எனவே அவைகளை எல்லாம் தடுத்து நிறுத்து வதோடு சட்டத்தினுடைய நோக்கங்களை அனைத்து மக்களுக்கு கும் எடுத்துச்சொல்ல வேண்டும். கிராமத்தில் உள்ள அலுவலர் கள் மூலம், ஊராட்சி ஒன்றியங்கள் மூலம், ரெவின்யூ இலாகா மூலம், செய்திப்படம் மூலம் விளம்பரம் செய்யவேண்டும். இந்த முறைகளிலே விளம்பரம் செய்து மக்களுக்கு எடுத்துச்சொல்லி, இந்தச் சட்டத்தைப் பற்றி சரியான முறையிலே எடுத்துசொல்லி, எந்த நோக்கத்திற்காக இந்த சட்டத்தைக் கொண்டுவந்தோமோ அதை நிறைவேற்ற முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்று கூறி அமைகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த கடன் நிவாரணத் திருத்தச் சட்டத்தைப் பொறுத்தவரையில் ரூபாய் 4,800-க்குக் குறைவாக வருமானம் உள்ள ஏழைகள் பட்டிருக்கின்ற கடனிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் கிடைக்க இச்சட்டம் கொண்டு வரப்பட்டது. இங்கே மாண்புமிகு உறுப்பினர் பேசியபோது போதிய விளம்பரம் இல்லாத காரணத்தால் ஏழைகளின் செவிகளுக்கு இச்சட்டம் எட்டாத நிலைமை இருக்கிறது என்கிற ஐயத்தை சொன்னார். குறிப்பாக கடன்பட்டிருக்கின்ற எல்லா ஏழைகளுக்கும் இச்சட்டம் எட்ட வேண்டுமென்கிற எண்ணத்தில் நல்ல முறையில் விளம்பரம் செய்யப்பட்டிருக்கிறது. இச்சட்டத்தின் பிரதான நோக்கம் என்னவென்றால், இச்சட்டத்திற்கு நீட்டிப்பு தரப்படவில்லையென்றால், 4,800 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் பெறுகின்றவர்கள் அடகு கடைக்காரர்களிடம் கடன் பட்டிருந்தால், ஏற்கெனவே இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியது போல, அவர்களுடைய நகைகளை ஏலம் விடக்கூடிய சூழ்நிலை ஏற்படும். இச்சட்டத்திற்கு கால நீட்டிப்பு இருக்கும்வரை தான் ஏழைகளுக்கு அடகு கடைக்காரர்களிடமிருந்து பாதுகாப்பு கிடைக்கும். அதனால் தான் கால நீட்டிப்பு கோரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் இங்கே குறிப்பிட்டதைப் போல விளம்பரம் செய்வதைப் பொறுத்த வரையில் இன்னும்அதிக அக்கறை செலுத்தப்படும் என்பதைத் தெரிவித்து கொள்கிறேன். கடன் நிவாரணம் கேட்டு 25,571 மனுக்கள் வந்ததில் 24,924 மனுக்கள் மீது தீர்ப்பு வழங்கப்பட்டு, டிஸ்போஸ் செய்யப்பட்டு, ஏழைகளின் நலன் பேணப்பட்டிருக்கிறது. ஆகவே, இச்சட்ட முன்வடிவை நிறைவேற்றித் தரும்படி மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 9/1987) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

1987 மே 8]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :—

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு கடன் நிவாரண (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவுஎண் 9/1987) நிறைவேற்றப் பெற வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன் வடிவு நிறைவேற்றப்பெற்றது.

(ஓ) மாநகராட்சி சட்டங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு 198.7.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1987 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநகராட்சி சட்டங்கள் (திருத்த)சட்ட முன்வடிவு(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 11/1987) **ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு. கே. சுப்பராயன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தவைர் அவர்களே, இந்தச் சட்டத்தை எதிர்த்து எதிர்த்து கடுமையாக களைத்துப் போய்விட்ட காரணத்தினால் மேற்கொண்டு இதிலே ஒன்றும் பேச இல்லை என்கிற நிலையிலும் ஒரே ஒரு வார்த்தை கூறி முடித்துவிடுகிறேன். மாநகராட்சிகளுக்கான தேர்தல் எப்போது நடைபெறும் என்பதைப் பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே அறிவிப்பார்களா என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

*திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி சட்ட திருத்தத்தைப் பொறுத்தவரையில் தனி அதிகாரிகள் மேலும் நிர்வாகத்தை நடத்த ஓராண்டு கால நீட்டிப்பு கேட்டு இங்கே சட்ட முன் வடிவை கொண்டு வந்திருக்கிறார்கள். சென்னை மாநகராட்சியிலே கடந்த 13 ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. கோயம்புத்தூர் மாநகராட்சியில் கடந்த 7 ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. மதுரை மாநகராட்சியிலே கடந்த 4 ஆண்டுகளாக தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் இல்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட கவுன்சிலர்களும், மேயரும் இருந்திருந்தாலாவது இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற தண்ணீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு, அரசிடம் போராடி நிறைய சாதித்து இருப்பார்கள். இப்போது இருக்கின்ற தனி அதிகாரிகள் அமைச்சர்களிடமும், அரசிடமும் இருந்து என்ன சாதிக்க முடி

**1987 ஆம் வருடம் ஏப்ரல் மாதம் 28-ந் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.